ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்பதையும், அதற்கான எஸ்டிமேட் எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமக்கல் ஆட்டோ நகர் சங்கம் 'சிட்கோ'வின் உதவியின் மூலம் நாமக்கல் அருகில் வள்ளிபுரம் என்ற தனியார் தொழிற்பேட்டை ஒன்றை சுமார் 65 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவ முன் வந்துள்ளது, அந்த ஆட்டோ நகர் சங்கம் அமைப்பதற்கு 65 ஏக்கர் நிலம் மொத்தப் பரப்பளவாகக் கொண்டு இதுவரை 39.73 ஏக்கர் நில உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது, அரசினுடைய புறம்போக்கு நிலம் 5.51 ஏக்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இருந்துதான் அதிக அளவில் லாரிகள் இந்தியா முழுவதற்கும் செல்கின்றன, தமிழ்நாட்டில் நாமக்கல், கரூர், திருச்செங்கோடு போன்ற பகுதிகள் அதிக அளவு லாரி தொழிலை நம்பித்தான் இருக்கின்றன. நாமக்கல்லில் ஏற்படவிருக்கின்ற ஆட்டோ நகரைப் போன்று மற்ற இடங்களில் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 195 திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

195—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி,

*192 திரு. இரா. தாமரைக்கனி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்—கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டத்தில். 'தாட்கோ' மூலமாக நடப்பு ஆண்டில் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது,

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

முற்பகல் 10-40.

2. உரிமைப் பிரச்சினை.

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து 'மாலை முரசு' 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பேரவைத் தலைவர் அளித்தத் தீர்ப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினை பற்றிய என்னுடைய தீர்ப்புரை:

7—2—1992 அன்று திரு. வி.பி. சந்திரசேகர், எம்.எல்.ஏ., அவர்கள் 5—2—1992 தேதியிட்ட மாலை முரசு (கோவைப் பதிப்பு) பத்திரிகையில் அந்த உறுப்பினரைத் தொடர்புப் படுத்தி வெளி வந்துள்ள ஒரு செய்தி தொடர்பாக அந்தப் பத்திரிக்கையின் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார் என்றும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, அது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருக்கிறது என்கிற காரணத்தினால் நேரடியாகவே அதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும், ஏன் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி உரிய நடவடிக்கை அந்தப் பத்திரிகையின் மீது எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை அப் பத்திரிகையிடம் கேட்டுப் பெற்று, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன். அப்பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில் அவர் தனது 6—3—1992 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்துள்ளார்கள்:—